**செ. கு. எண்**:21 **நாள்**:11.1.2011.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - **11 .1. 2012**

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வந்த திருமதி D.கீதா அவர்கள் 3.1.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, சாலை விபத்து ஏற்பட்டு படுகாயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 6.1.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர், செல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு. K.கோபாலகிருஷ்ணன் அவர்கள் 9.1.2012 அன்று விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. கமல்ராஜ் என்பவர் 10.1.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது லாரி மோதியதில், படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

பணியில் இருக்கும் போது காலமான அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர் திருமதி கீதா, ஆய்வாளர் திரு. கோபாலகிருஷ்ணன், மற்றும் தலைமைக் காவலர் திரு. கமல்ராஜ் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவங்களில் காலமான காவலர் கீதா, ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன், மற்றும் தலைமைக் காவலர் கமல்ராஜ் ஆகியோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**